பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 10 | வியாழக்கிழமை | 26.09.2024 | அதிர்வு 055

**பொதுத் தேர்தலில் ஒன்றிணைவு:**

## தமிழ், முஸ்லிம் கட்சிகள் பேச்சு?

தமிழ், முஸ்லிம் கட்சிகள் இணைந்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பலமானதொரு தரப்பாகப் போட்டியிடுவது குறித்து ஆராய்ந்து வருகின்றன 06

## தியாகி திலீபனின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று



தியாக தீபம் திலீபனின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று வியாழக்கிழமை தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கிலும், புலம்பெயர் தேசங்களிலும் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

பிரதான நினைவேந்தல் நிகழ்வு யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவுத்தூபியில் இன்று முற்பகல் 10.48 மணிக்கு ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும்.

இதேநேரம், யாழ். பல்கலைக்கழகம், தீவகம், கிழக்கு மாகாணம் உட்பட வடக்கு, கிழக்கின் பல இடங்களிலும் புலம்பெயர் தேசங்களிலும் திலீபனை நினைவேந்தும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இராசையா பார்த்தீபன் என்ற இயற்பெயரை கொண்ட திலீபன் 1963ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதி யாழ்ப்பாணம் – ஊரெழுவில் பிறந்தவர். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தீவிரமடைந்தபோது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் 06

# வரும் தேர்தல்களில் தமிழ்க் கூட்டமைப்பாக களமிறங்க வேண்டும்!

## மாவையிடம் தமிழரசின் மத்திய செயற்குழு கோரிக்கை என்று அவரே நேற்று தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

**“நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நாடாளுமன்றத் தேர்தல் உட்பட அனைத்து தேர்தல்களிலும் போட்டியிட வேண்டும். இதுவே மக்கள் விருப்பம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் என்னிடம் தெரிவித்துள்ளார்கள். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் நோக்குடன் நான் செயற்படவுள்ளேன்.”**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.** 06



## யாழ். மாவட்டத்தின் எம்.பிக்கள் எண்ணிக்கை 6 ஆகக் குறைவு!

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 6 ஆகக் குறைவடைந்துள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற 06




‘தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என அடிக்கு மாம்!’ – என்பார்கள்.

அந்தப் பாணியில் காய் நகர்த்தப் புறப்பட்டிருக்கின்றார் ‘சணம் பித்தம் சணம் வாதம் போக்கு’ புகழ் தலைவரான மாவை சேனாதிராஜா.

தமிழரசு கட்சியின் பிரமுகர்களான ஸ்ரீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சரவணபவன், சிவமோகன், ஸ்ரீநேசன் போன்றவர்களைத் தனது இல்லத்துக்கு அழைத்துப் பேசி, அதன் முடிவில், வந்தவர்களை கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் என்று அடையாளப்படுத்தி, ஒரு கயிறையும் அவிழ்த்து விட்டுடிருக்கின்றார் அவர்.

வரும் பொதுத்தேர்தலில் கூட்டாக – ஒற்றுமையாக – களம் இறங்குவது பற்றிய கயிறு தான் அது.

கூட்டத்துக்கு மாவை அழைத்து வந்தவர்களில் ஒருவர் புலிகள் 06

# ஒன்பது மாகாணங்களுக்கும் புதிய ஆளுநர்கள் நியமனம்!

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் 9 மாகாணங்களுக்கும் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை நியமிக்கப்பட்ட ஆளுநர்களின் விவரம் வருமாறு:-

01. நாகலிங்கம் வேதநாயகன் - வடக்கு மாகாண ஆளுநர்
02. ஜயந்த லால் ரத்னசேகர - கிழக்கு மாகாண ஆளுநர்
03. ஹனீஸ் யூசுப் - மேல் மாகாண ஆளுநர்
04. சரத் பண்டார சமரசிங்க அபயகோன் - மத்திய மாகாண ஆளுநர்
05. பந்துல ஹரிஸ்சந்திர - தென் மாகாண ஆளுநர்
06. திஸ்ஸ குமாரசிரி வர்ணசூரிய - வடமேல் மாகாண ஆளுநர்
07. வசந்த குமார விமலசிறி - வட மத்திய மாகாண ஆளுநர்
08. சம்பா ஜானகி ராஜரத்ன - சப்ரகமுவ மாகாண ஆளுநர்
09. கபில ஜயசேகர - ஊவா மாகாண ஆளுநர்

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்கவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்.





# கட்டுநாயக்க விமான நிலையத்தின் 2 ஆவது பயணிகள் முனையத்தை நிர்மாணிப்பதற்கான விலைமனு கோரல்




கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய இரண்டாவது பயணிகள் முனையத்தின் கட்டுமானப் பணிகளுக்காக விலைமனு கோரப்பட்டுள்ளது.

ஜப்பான் கடனுதவியின் அடிப்படையில் மேற்படி முனையம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ்.ருவன்சந்ர தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டில் இந்த முனையத்தை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்தன.

புதிய பயணிகள் முனையத்தின் ஊடாக வருடாந்தம் 9 மில்லியனுக்கும் அதிகமான பயணிகளுக்கான வசதிகளை வழங்க முடியும் என அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய முதலாவது பயணிகள் முனையத்தின் ஊடாக தற்போது வருடாந்தம் 6 மில்லியனுக்கும் அதிகமான பயணிகளுக்கான வசதிகள் வழங்கப்படுகின்றன.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய இரண்டாவது பயணிகள் முனையம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் வருடாந்தம் 15 மில்லியனுக்கும் அதிகமான பயணிகளுக்கான வசதிகளை வழங்க முடியும் என போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்ர சுட்டிக்காட்டியுள்ளார்.




# புதிய ஜனாதிபதியின் கீழ் ஸ்திரத்தன்மை ஏற்படும்

## சர்வதேச நாணய நிதியம் அறிக்கை

ஜனாதிபதி அநுரகுமார திஸாநயக்க, பொருளாதார பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உருவாக்கி சுபீட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்துவார் என சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு வாழ்த்து தெரிவித்த சர்வதேச நாணய நிதியம் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் தொடர்பில் பல வருடங்களாக முன்னெடுத்த செயற்பாடுகள் மற்றும் இணக்கப்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தை இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின் கீழ் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என சர்வதேச கடன் தர மதிப்பீட்டு நிறுவனமான மூடிஸ் (Moody's) நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டம் உள்ளிட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் அவ்வாறே தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என அந்த நிறுவனம் அறிக்கையூடாகக் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், எதிர்வரும் காலங்களில் இலங்கையின் கடன் அவதான நிலைமை அதிகமாகவே இருக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த பொருளாதார சவாலை வெற்றிகொள்வதற்கு புதிய அரசாங்கம் முன்னுரிமையளிக்கும் என சர்வதேச கடன் தர மதிப்பீட்டு நிறுவனமான மூடிஸ் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.



# சர்வதேச நாணய நிதியத்துடனான நீடிக்கப்பட்ட கடன் திட்டம் தொடரும்

## ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க விசேட உரை

"சர்வதேச நாணய நிதியத்துடன் நீட்டிக்கப்பட்ட கடன் திட்டம் தொடரும். கடன் மறுசீரமைப்பு தொடர்பான சலுகைகள் குறித்து விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"பிக்குமார்களே, மதத் தலைவர்களே, பெற்றோர்களே, சகோதர சகோதரிகளே, பிள்ளைகளே!

பல தசாப்தங்களாக நாம் எழுப்பிய குரலுக்கு மெது மெதுவாக ஆனால் சீராக செவிசாய்த்து, நாங்கள் முன்வைத்த வேலைத்திட்டத்திற்கு உயிர்மூச்சாக இருந்த இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் எங்களது கௌரவத்தைத் தெரிவிக்கிறோம். எங்கள் வேலைத்திட்டத்தில் உடன்படாத தரப்பினர் கூட நாங்கள் அடைந்த வெற்றியால் மகிழ்ச்சி அடைந்தால் மாத்திரமே நீங்கள் அளித்த இந்த வெற்றி மேலும் பலமானதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

எனவே, இந்த வெற்றியின் உரிமையை நம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் அர்ப்பணிக்க விரும்புகிறேன். நமது அரசியல் இயக்கத்தின் மீது நம்பிக்கை வைத்து, பல்வேறு அவதூறுகளையும், பொய்யான, திரிபுபடுத்தப்பட்ட தகவல்களையும் ஒதுக்கி விட்டு, புதிய பரிசோதனைக்கு அஞ்சாமல், எமது அரசியல் இயக்கத்திற்கு நமது நாட்டின் ஆட்சி அதிகாரத்தை வழங்கும் அளவிற்கு பெரும் உறுதியுடன் இருந்த பிரஜைகள் உட்பட அனைத்து மக்களுக்கும் இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பணிக்கு தோள் கொடுப்பதற்கான பலம் இருக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

இந்த வெற்றிக்காக எமக்கு முன்னரும், எங்களுடனும் பலவிதமான தியாகங்களைச் செய்த, சில சமயங்களில் தங்கள் உயிரைக்கூட தியாகம் செய்த பல தலைமுறைகளின் விலைமதிப்பற்ற ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரையும் நாங்கள் மரியாதையுடன் நினைவுகூருகிறோம். இந்த வெற்றியையும், அதன் மூலம் கட்டியெழுப்பப்படும் வளமான நாட்டையும் அவர்களுக்கு அளிக்கும் கௌரவமாகவே நான் கருதுகிறேன்.

இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான பங்கை கூட்டு செயற்பாடாக நிறைவேற்றும் திறன் எமக்கு உள்ளது. அதற்கான மிகத் திறமையான குழு எங்களிடம் உள்ளது. நம் அனைவருக்கும் அது குறித்த முழுமையான உறுதிப்பாடு உள்ளது. நாம் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்த எத்தகைய மாற்றத்தையும் மேற்கொள்வதற்கு முன்னதாக பொருளாதாரத்தை நிரந்தரமான நிலைக்கு உயர்த்துவது அவசியம் என நாம் நம்புகிறோம்.

அதற்காக நீண்டகால மத்திய கால திட்டங்களைத் தயாரிப்பதற்கு முன்னர், பின்பற்ற வேண்டிய துரித பொருளாதார செயற்பாடுகளின் ஊடாக குறுங்கால ஸ்தீரநிலையை ஏற்படுத்த நாம் நடவடிக்கை எடுப்போம்.

நாம் எதிர்பார்க்கும் மாற்றத்திற்காக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் அவை அனைத்தும் தற்போதைய பொருளாதாரத்தில் ஸ்திர நிலையையும் நம்பிக்கையும் கட்டியெழுப்புவதில் மாத்திரமே தங்கியுள்ளது. அதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் துரிதமாக பேச்சுவார்த்தை ஆரம்பித்து நீடிக்கப்பட்ட கடன் வசதியுடன் தொடர்புள்ள விடயங்களை தொடர்ந்து முன்னெடுக்க நாம் எதிர்பார்க்கிறோம்.

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக, சம்பந்தப்பட்ட கடன் தரப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அது தொடர்பான பணிகளை விரைவில் நிறைவு செய்து, உரிய கடன் நிவாரணத்தைப் பெறுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அதற்கு இந்த நாட்டு மக்களைப் போலவே சர்வதேச சமூகத்தினதும் ஆதரவையும் பெற முடியும் என நம்புகிறோம். அந்த ஒத்துழைப்பின் மூலம் இந்த கூட்டு முயற்சியில் வெற்றி பெற முடியும் என எதிர்பார்க்கிறோம்.

எமக்கு அதிகாரத்தை கையளிக்கையில் "மாற்றம்" ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணக் கருவே மக்களிடத்தில் ஆழமாக பதிந்திருந்தது. மாற்றம் என எமது நாட்டு மக்கள் கருதுவது அரசியல் முறைமையில் காணப்படும் அனைத்து விதமான மோசமான பண்புகளை மாற்றுவதையாகும். தற்போது அது நிரூபனமாகியுள்ளது. இந்த நாட்டில் நடைபெற்ற அனைத்துவிதமான தேர்தல்களையும் நோக்கினால், தேர்தலுக்குப் பின்னரான எந்த வன்முறைச் சம்பவமும் நடைபெறாத ஒரேயொரு தேர்தலாக நாம் வெற்றியீட்டிய ஜனாதிபதித் தேர்தலாக வரலாற்றில் இணைக்க முடிந்துள்ளது.

இது நமது நாட்டு மக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. இந்த நிலைமையை உறுதிப்படுத்தி நிலைப்படுத்துவது எமது நோக்கமாகும். அரசியலில் அதிகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அதற்காக வியூகம் அமைப்பதற்கும் எவருக்கும் உரிமையுள்ளது. அரசியல் செய்யும் நேரத்தில் அரசியல் செய்வதற்கும், நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய நேரத்தில் அதற்காக ஒன்றிணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தையும் இந்த தருணத்தில் வலியுறுத்துகிறேன். அதற்கான தலைமைத்துவத்தை நாம் வழங்குகிறோம்.

சிங்களவராக இருந்தாலும், தமிழராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும், பேர்கராக இருந்தாலும், மலேயராக இருந்தாலும், இவர்கள் அனைவருக்கும் "நாம் இலங்கைப் பிரஜைகள்" என்று பெருமையுடன் வாழக்கூடிய நடைமுறைச் சாத்தியமான ஒரு நாடு உருவாகும் வரை, இந்த நாடு தோல்வியடையுமே தவிர வெற்றியடையாது. அதற்காக

தொடர்ச்சி▼

# சர்வதேச நாணய நிதியத்துடனான நீடிக்கப்பட்ட கடன் திட்டம் தொடரும்

## ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க விசேட உரை

தொடர்ச்சி▲

அரசமைப்பு ரீதியான,பொருளாதார, அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள ஒரு போதும் நாம் பின்வாங்க மாட்டோம்.

தனது இனம், தனது மதம், தனது வர்க்கம், தனது சாதி என இந்த நாடு பிரிந்திருந்த காலத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்து, பன்முகத்தன்மையை மதிக்கும் இலங்கை தேசமாக இந்நாட்டைக் கட்டியெழுப்பும் நிலையான, நிரந்தரமான வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பிப்போம்.

இந்த அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்காக அவற்றை செயல்படுத்த அவசியமான செயற்திறன்மிக்க மற்றும் நேர்மையான அதிகாரிகளை நியமிக்கும் பல நடவடிக்கைகளை நாங்கள் ஏற்கனவே நிறைவு செய்துள்ளோம். பொதுப் பணிக்கு இடையூறு ஏற்படாத மற்றும் பிரஜைகள் தொடர்பில் பாதகமான அழுத்தங்கள் ஏற்படாத வகையில், எதிர்பார்த்த மாற்றங்கள் படிப்படியாக மேற்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்வோம்.

சட்டத்தை மதிக்கும் நாட்டை உருவாக்கவும், ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்கவும் நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். அனைத்து பிரஜைகளினதும் சமூக பாதுகாப்பை உறுதி செய்வோம்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற எண்ணக்கருவை மீள உயிர்ப்பிப்போம்.

எமது நாட்டை கட்டியெழுப்புகையில் அரச சேவைக்கு பாரிய பங்கு இருக்கிறது என்பதை நம்புகிறோம்.

பொது மக்களை கண்ணியமாக நடத்தும் அரசாங்கத்தின் இலக்குகளை நோக்கிச் செல்லும் அரச சேவையை உருவாக்குவோம். செயற்திறன் மிக்க, நேர்மையான மற்றும் ஜனரஞ்சகமான அரச சேவையை உருவாக்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே எமது எதிர்பார்ப்பு. அதற்கான நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டம் எங்களிடம் உள்ளது.

மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள அதிக வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு தாய்க்கும் தந்தைக்கும் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படும் நிலை ஏற்பட இடமளிக்க மாட்டோம்.

தமது பிள்ளைக்கு நல்ல பாடசாலை மற்றும் சிறந்த கல்வியை வழங்க அந்த ஒவ்வொரு பெற்றோருக்கும் உரிமை உண்டு. அனைத்து பிள்ளைகளுக்கும் சிறந்த கல்வியை வழங்கவும், அடுத்த தலைமுறையை பாதுகாக்கவும் நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம். அறிவு,திறன்,மனப்பாங்கு என்பவற்றை மேம்படுத்தி இளைஞர் சமூகத்திற்கு நம்பிக்கை ஏற்படக் கூடிய எதிர்காலத்தை உருவாக்குவோம். எந்த நாட்டிற்கு நாம் சென்றாலும், விமான நிலையத்தின் தன்மையை வைத்து அந்த நாடு குறித்து ஒரு கண்ணோட்டத்தை உருவாக்க முடியும். அதன் ஒழுங்கு, மக்களின் நடத்தை,செயல்பாடு, போன்றவற்றின் மூலமும் மறைமுகமாக அந்த நாட்டின் இயல்பு எடுத்துக் காட்டப்படுகின்றது.

அதையும் தாண்டி சுற்றுச்சூழலின் தூய்மை, வீதிகளில் வாகனங்கள் செல்லும் விதம், முதியோர்களை நடத்தும் விதம், விருந்தோம்பல் செய்யும் முறை, விலங்குகள் எப்படி நடத்தப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்த முடியும். நம் நாட்டின் பிம்பத்தை அதே வகையில் தெளிவாக தெரியும் வகையில் கட்டியெழுப்ப நாம் திட்டங்களை தயாரித்து முடித்துள்ளோம். அந்த உருவாக்கத்திற்காக குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த நாட்டின் கடவுச்சீட்டை உலகமே மதிக்கும் நிலைக்கு, நாம் நாட்டை கட்டியெழுப்புவது அவசியம். இந்த நாட்டின் பிரஜைகளுக்கு "நான் இலங்கையர்" என்று பெருமையுடன் கூறக்கூடிய நாட்டை உருவாக்குவது அவசியம். இந்த நாட்டின் பிரஜையாக இருப்பது பெருமை என்று நம் நாட்டு மக்கள் உணரும் வகையில் இந்த நாட்டை உருவாக்குவது அவசியம். அதற்கு உங்களின் கூட்டுப் பங்களிப்பு தேவை.

அனைத்து பிரஜைகளுக்கும் சமூக நீதியை நிறைவேற்றும் அரசொன்றை உருவாக்க நாம் பொறுப்புடன் பங்களிக்கிறோம். அறிவு, திறன்கள், கல்வி மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றை

ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தின் மூலம் எமது சிறுவர்கள் மற்றும் இளைஞர் சந்ததிக்கு நம்பகமான எதிர்காலத்தை நாம் கட்டியெழுப்புவோம்.

நமது நாட்டின் சனத்தொகையில் ஐம்பத்திரண்டு வீதத்தைத் தாண்டிய பெண்கள் சமூகம், இந்நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூகச் செயல்பாட்டிற்கு பெரும் பங்களிப்பைச் செய்யும் குழுவாகும். பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பாக அனைவரும் ஒன்றிணைந்து எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு நாம் செல்வோம்.

சகல நிறுவனங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை பலப்படுத்துவதற்கு நாம் செயற்படுவோம்.

அதற்கான எமது அர்ப்பணிப்பின் முன்னுதாரணத்தை வெளிப்படுத்தும் வகையில் ஏற்கெனவே எமது பிரதமர் பதவிக்கு பெண் ஒருவரை நியமித்துள்ளோம். எமது சனத்தொகையில் பெருந்தொகையானோர் ஊனமுற்று விசேட சமூக பாதுகாப்பு கிடைக்க வேண்டியவர்களாகும். அவர்களுக்காக பலமான சமூக பாதுகாப்பு கட்டமைப்பொன்றை நாம் திட்டமிட்டுள்ளதோடு அதன் குறுங்கால நடவடிக்கையை விரைவாக ஆரம்பிப்போம்.

நாம் செல்லும் பயணத்தில் சமூக கட்டமைப்பின் எந்தவொரு பகுதியையும் கைவிடப்போவதில்லை என்பதற்கு நாம் பொறுப்பு கூறுகிறோம். ஒவ்வொருவரினதும் தனித்துவத்திற்கு மதிப்பளித்து அவற்றை நாட்டின் முன்னேற்றத்துக்காக சாதகமான முறையில் பயன்படுத்திக்கொள்ள எமது பங்களிப்பை வழங்குவோம்.

மக்கள் இறைமைக்கு மதிப்பளிக்கும் அதேநேரம், அவர்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்போம். எம் மீதான சந்தேகம் காரணமாக நிச்சயமற்ற நபர்கள் இருப்பதை நாம் அறிவோம். எனது செயற்பாடுகளின் ஊடாக உங்களின் நம்பிக்கையை வெல்ல எதிர்பார்க்கிறேன்.

உங்களுடைய விமர்சனங்களை பொறுத்தமான தருணத்தில் ஏற்றுக்கொள்வேன். அதேபோல் நாங்கள் கட்டியெழுப்ப போகும் எதிர்காலத்தின் பங்குதாரர்களாக உங்களை வலுவூட்டுவோம். எமக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளை கலைய முடியுமானால்,நமக்கிடையிலான இலக்கு சமமானவை என நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்.

அதன் ஊடாக நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடியை ஏற்றுக் கொள்ளவும் அதன் ஊடாக முன்னோக்கிச் செல்வதற்குத் தேவையான மூலோபாயங்களை இணைந்து திட்டமிடவும் முடியும்.

இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்காக காத்திரமாகவும் நேர்மையாகவும் இணையும் அனைவருக்கும் எமது கதவுகள் திறந்துள்ளன. மக்களின் ஆணைக்கு அமைவான பாராளுமன்றம் ஒன்று அவசியப்படுகிறது. இறுதியாக இருந்த நாடாளுமன்றம் மக்கள் ஆணையை திரிபுபடுத்தியதாக காணப்பட்டது. அதனால் நேற்றைய தினம் பாராளுமன்றத்தை கலைக்க நடவடிக்கை எடுத்தேன்.

அரசமைப்புக்கு அமைவாக நாட்டை கொண்டு செல்வதற்காக எமது நாடாளுமன்ற பிரநிதித்துவத்திற்கு அமைவாக அமைச்சரவை ஒன்றை நியமித்தேன். அன்றாடம் சூரியன் உதிக்கும் ஒவ்வொரு பொழுதிலும் மக்கள் காணும் கனவுகள் உள்ளன.

அது இன்று இருப்பதை விடவும் சிறந்த நாடாகும்!

ஆனாலும், பல வருடங்களாக அது கனவாகவே போய் விட்டது என்பதையும் நானும் அறிவேன்.

சந்தர்ப்பவாதம், அதிகாரமோகம்,சர்வாதிகாரம் மற்றும் இனவாதம் காரணமாக எமது நாட்டை மேலும் உயர்த்தி வைக்க எம்மால் முடியாமல் உள்ளது..!

இருப்பினும், எமக்கு வரலாற்றில் நழுவவிட முடியாத சந்தர்ப்பமொன்று கிடைத்திருக்கிறது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து பல்வகைத்தன்மையை ஏற்றுக்கொள்ளும் செழிப்பான நாட்டை கட்டியெழுப்புவோம்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

காலத்தில் கருணா தரப்பு எம்.பியாக இருந்தவர். பின்னர் புலனாய்வுத் துறையுடன் சேர்ந்து இயங்கியவர் எனக் கருதப் பட்டவர்.

கலந்துரையாட வந்திருந்த ஐந்தாறு பேரும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் கட்சியின்முடிவை மீறி, தமிழ்ப் பொது வேட்பாளரை அல்லது ரணிலை ஆதரித்துப் பணி செய்தவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகி உள்ளோர். அதனால் அவர்கள் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை ஆபத்து எதிர்கொள்ளும் இக்கட்டிலும் பீதியிலும் இருப்பவர்கள். – மாவை உட்பட.

அந்த நெருக்கடிக்கு மத்தியில், தேர்தலில் தங்களின் வேட்பாளர் நியமனத்தை உறுதிப்படுத்துவது மாவை உட்பட்டோரின் நேற்றைய கலந்துரையாடல் பம்மாத்தின் பின்னணி என்று தெரிகின்றது.

அத்தோடு புலம்பெயர் பெருந்தகைகளின் கையும் அல்லது வழிகாட்டலும் இதன் பின்புலத்தில் ரகசியமாக புதைந்து கிடப்பதாகவும் ஒரு தகவல் உண்டு.

'சோழியன் குடுமி சும்மா ஆடாதலலவா?...!'

\+ + +

முன்னைய ரணிலின் அரசு கடந்த ஏப்ரல் மாதம் முதல் வாரி வழங்கி வந்த மதுபான சாலை பெர்மிட்டுகளை ரத்து செய்யும் படியான உத்தரவை புதிய ஜனாதிபதி விடுத்திருக்கின்றார் எனத் தெரிய வருகின்றது.

இது விடயத்தில் ஜனாதிபதியின் வாய்மூல வழிகாட்டலைப் பெற்றுள்ள அவரின் செயலாளர், அது பற்றிய அறிவுறுத்தலை நிதி அமைச்சுக்கு வழங்க, நிதி அமைச்சு தன் பங்குக்கு அந்த அறிவுறுத்தலை நாளை கலால் திணைக்களத்துக்கு அனுப்பும். அதன் பின்னரே மேற்படி பார் லைசென்றுகளை முடக்கும் நடவடிக்கை களத்தில் எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை செவிமடுத்த போது ஓரிரு நாள்களுக்கு முன்னர் ஒரு நண்பர் கொழும்பில் வழியில் மறித்து என்னிடம் கூறிய ஒரு விடயம் நினைவுக்கு வந்தது. எப்போதும், எந்நேரமும் நாடாளுமன்றக் கலைப்பு இடம்பெறலாம் என நாம் செய்தி வெளியிட்டு இருந்த சமயம் அது.

"உங்கள் பாராளுமன்ற கலைப்பை விடுங்கோ... பெர்மிட் பிஸ்னஸ்ல திறந்த 'Bar'ஆளுமன்றம் எப்போது கலைக்கப் படும்?" – என்று கேட்டார் அவர்.

அனுர குமார திஸநாயக்க மக்கள் ஜனாதிபதிதான். மக்கள் கேட்டதன் படி நாடாளுமன்றத்தையும் கலைத்து, என் நண்பர் போன்றோரின் கோரிக்கையை ஏற்று 'Bar'ஆளுமன்றத்தையும் கலைக்க ஏற்பாடு செய்து விட்டார் அல்லவா?

---

## வரும் தேர்தல்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ். தெல்லிப்பழை, மாவிட்டபுரத்தில் அவரது இல்லத்தில் நேற்று புதன்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், கட்சியின் நிர்வாகிகள் இன்று (நேற்று) புதன்கிழமை நேரில் வந்து என்னுடன் கலந்துரையாடினார்கள்.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகக் கொள்கையுடன் பயணித்த தமிழ்க் கட்சிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்டு வந்ததை நினைவுகூர்ந்த அவர்கள், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும், எதிர் காலத்திலும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காக மீண்டும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்றும், ஒன்று பட்டு போட்டியிட்டு வெற்றியீட்ட வேண்டும் என்றும், இதற்கு மக்கள் பூரண ஆதரவை தெரிவித்து வருகின்றார்கள் என்றும் தெரிவித்தார்கள்.

அவ்வாறான கருத்தை நீண்ட நாட்களாகவும், அண்மைக்காலத்திலும் என்னிடம் வேண்டுகோளாக விடுக்கப் பட்டதை நான் கவனமாக அவதானித்து வந்துள்ளேன் .

ஆகையால், இந்தக் கோரிக்கையை அவர்களிடமும் தெரிவித்தேன். நாங்கள் ஒன்றுபட்டு செயற்பட்டதால் ஏற்பட்ட நன்மைகளையும், இனத்தின் விடுதலைக்கான முன்னேற்றத்தையும் நான் நன்கு அறிந்திருந்தேன். இவர்களுடன் பகிர்ந்திருந்தேன் .

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற முறையில் நாங்கள் எதிர் காலத்திலும் தமிழினத்தின் விடுதலைக் காகவும், தமிழ்த் தேசத்துக்காகவும் ஒற்றுமைப்பட்டு செயற்பட வேண்டியதை நானும் வலியுறுத்திக் கூறினேன் .

இந்த வேண்டுகோளை இலங்கைத் தமிழரசுக் கட்சி நிர்வாகத்திடம் ஏற்கனவே கூறியுள்ளேன். இந்தச் சந்திப்பையும் கொண்டு சென்று இந்த ஒற்றுமைக்காகச் செயற்படவுள்ளேன்.

இத்தகைய ஒற்றுமை முயற்சி தொடர்பில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சித் தலைவர்களுடனும், பல்கலைக்கழக மாணவ சமுதாயத் திடமும், அமைப்புகளுடனும் பேச்சுகள் நடத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றிணைந்து செயற்படவுள்ளேன். அதற்கான முயற்சிகளை உடனேயே ஆரம்பிக்கவுள்ளேன்." – என்றார்.

---

## தமிழ், முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என்று அறியமுடிகின்றது.

குறிப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோருக்கிடையில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் அதன் பெறுபேறுகள் குறித்தும், எதிர் வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இது பற்றி ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம்,

"அடுத்த தேர்தலில் அரசொன்றை அமைப்பதற்காக மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளத் தயாராகி வருகின்றோம். இம்முறை தேசிய மக்கள் சக்தியே ஐக்கிய மக்கள் கூட்டணிக்கான முக்கிய சவாலாகக் காணப்படுகின்றது. ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு அப்பால் இருக்கும் ஏனைய கட்சிகளுடனும் கூட்டணி அமைப்பதற்கு முயற்சித்து வருகின்றோம்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் மேற்குறிப்பிட்ட சந்திப்பு பற்றி சுமந்திரனிடம் வினவியபோது, நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் குறித்தே தாம் கலந்துரையாடியதாகவும், பொதுத் தேர்தல் தொடர்பில் எதுவும் பேசவில்லை என்றும் தெரிவித்தார்.

---

## தியாகி திலீபனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இணைந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த அவர், இந்திய அமைதிப் படை நாட்டில் நிலைகொண்டிருந்தபோது, மீளக் குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும், கிழக்கிலும் புதிதாகத் திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைக் கூடங்களிலும் இராணுவ – பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாகப் பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும் என 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி உணவு – நீரைத் தவிர்த்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி முற்பகல் 10.48 மணிக்கு அவர் உயிர்நீத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## யாழ்.மாவட்டத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உறுப்பினர்களின் எண்ணிக்கை இதுவரை 7 ஆக இருந்த நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் மூலம் 6 பேர் மட்டுமே தேர்வு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலில் ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் வேட்புமனுவில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் குறிப்பிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு வெளியிடப்பட்ட பட்டியலிலேயே யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 7 இல் இருந்து 6 ஆகக் குறைவடைந்தமை கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விவகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாள் கசிந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளுக்காக கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரிகளை இன்று ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணையாளர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய பெரும்பாலான மாணவர்கள் இந்த சம்பவத்தின் காரணமாக எதிர்கொண்டுள்ள அழுத்தம் மற்றும் அவர்களின் மனித உரிமை மீறல் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாள் பரீட்சைக்கு முன்னதாக வெளியானதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இதுவரை 2 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகளின் போது வெளிக்கொணரப்பட்ட தகவல்களுக்கு அமைய சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகள் நிறைவடையும் வரையில் புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தை விளக்கமறியலில் வைக்க உயர் நீதிமன்றம் உத்தரவு



குடிவரவு – குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டியவை விளக்கமறியலில் வைக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலத்திரனியல் முறையில் விசா விநியோகிப்பதற்கு அரசாங்கம் எடுத்திருந்த தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்கி உயர் நீதிமன்றம் கடந்த ஓகஸ்ட் 2 ஆம் திகதி பிறப்பித்த இடைக்கால தடையுத்தரவிற்கு அமைவாக செயற்படத் தவறியமையால் அவரை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய நீதியரசர்கள் அடங்கிய குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இலத்தரனியல் விசா முறைமையை இரத்துச் செய்து பழைய முறையில் விசா விநியோகிக்குமாறு குடிவரவு – குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

ஒரு மாதத்திற்கு அதிக காலம் சென்றும் இதுவரை நீதிமன்ற உத்தரவிற்கு அமைய செயற்படாததன் ஊடாக குடிவரவு – குடியல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் வேண்டுமென்றே நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த தவறியுள்ளார் எனவும், அவருக்கு எதிராக தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் கடந்த 13 ஆம் திகதி நகர்த்தல் பத்திரம் ஊடாக பாட்டலி சம்பிக்க ரணவக்க, ரவூப் ஹக்கீம் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அன்றைய தினம் விடயங்களை ஆராய்ந்த நீதிமன்றம், குடிவரவு – குடியல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் வேண்டுமென்றே உயர் நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்த தவறியமை தெரியவருவதால் அவருக்கு எதிராக நீதிமன்ற அவதூறு வழக்கை தாக்கல் செய்யுமாறு மனுதாரர்களுக்கு நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டது.

அதற்கமைய, மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குடிவரவு – குடியல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு எதிராக மனுதாரர்கள் நீதிமன்ற அவதூறு குற்றச்சாட்டின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தமையுடன் அந்தக் குற்றப்பத்திரிகை திறந்த நீதிமன்றத்தில் அவருக்கு வாசித்து காண்பிக்கப்பட்டது.

நாட்டின் உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறியமை மிகவும் பாரதூர நிலை எனத் தெரிவித்த நீதியரசர்கள் சட்டவாட்சியை பாதுகாக்கும் பொறுப்பு தமக்கு உள்ளதாக அறிவித்தனர்.

அதனடிப்படையில், குடிவரவு – குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தை கைது செய்து விளக்கமறியலில் வைக்குமாறும் நீதியரசர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இந்த மனு மீதான விசாரணை நிறைவடையும் வரை அவரை விளக்கமறிலில் வைக்குமாறும் நீதியரசர்கள் குழாம் மேலும் உத்தரவிட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மகத்துவம் மிக்க தியாகி

தமிழ்த்தேசிய அரசியல்போராட்ட வரலாற்றில், தியாகி திலீபன் ஒரு குறியீடு. அவர் தமது இன்னுயிரை இனத்துக்காகஆகுதியாகியஅந்தவரலாற்று ஈகத்தின் 37 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

உலகத்துக்கு அஹிம்சையைப் போதித்த காந்தி தேசத்துக்கே, திலீபன் காந்தீயத்தைப் போதித்தவன். ஓர் ஆயுதமுனைபோராட்ட இயக்கத்துக்குள் இருந்து, அஹிம்சை வழியில் போராடி உயிர்நீத்தவர் என்ற அடையாளத்தைப் பெற்றவர்.

அவரின் ஆகுதிப் பயணம், தமிழ்த் தேசிய போராட்டத்தை நோக்கி ஆயிரக்கணக்கான இளைஞர்களை இழுத்து வந்தது.

திலீபன் எந்த தலைமுறைகளாலும் மறக்க முடியாத போராளி. எந்த தலைமுறையும் மறந்து விடக் கூடாத மகத்துவமான தியாகி.

மறப் போராட்டத்தில் உச்சம் தொட்டுக் காட்டிய விடுதலை புலிகளின் மாவீரர்கள் மத்தியில், அறப் போராட்டத்தில் உச்சம் தொட்டு முகிழ்ந்தவன் தியாக தீபம் திலீபன்.

சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல், தன் உயிரைத் தானே அணு அணுவாகச் சிதைத்து, தாயக விடுதலைக்காக ஆகுதியாக தன்னை அழித்த - அளித்த - அந்தத் தினத்தின் 37 ஆவது வருட நினைவு நாளில் இன்று நாம் நிற்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு தமது இன - தேச - விடுதலைக்கான போராட்டத்தைத் தொடர்வதற்கு மிஞ்சியிருக்கும் ஒரே பாதை தியாகி திலீபன் முன்னுதாரணமாக காட்டிச் சென்ற அறவழிதான். அகிம்சை மார்க்கம் தான்.

பசியை - பசித்திருத்தலை - உயிர் வாழ்வுக்குரிய உரிமைக்கான ஆயுதமாக்கி, மனித இனத்தையே வியப்பில் ஆழ்த்திய பெருந்தகை அவன். இன்று தடுமாறி கிடக்கும் தமிழினத்திற்கு அவன் காட்டிச் சென்ற அறவழிப் போராட்ட மார்க்கமே ஒரே தெரிவு. தமிழர் தேசிய அரசியலை முன்னெடுத்துச் செல்வதற்கு நமக்கு எஞ்சியிருக்கும் பாதை திலீபன் காட்டிய அறவழிப் பாதை மட்டுமே.

பசித்திருந்து, தாகத்தோடு துடித்திருந்து, 12 நாள்கள் அவலப்பட்டு, அணு அணுவாய்த் தன்னை சிதைத்தழித்துத் தன்னுரையே அஹிம்சைப் போராட்டத்திற்காகத் தியாகம் செய்து, அந்தப் போராட்ட மார்க்கத்தை நம் இனத்துக்கு மட்டுமில்லாமல் உலகுக்கு வாழ்வியல் மூலம் வழிகாட்டிச் சென்று உத்தமன் திலீபன்.

அஹிம்சை மார்க்கத்திலான போராட்டம்எதுவும்சுயதியாகத்தினால் மட்டுமே கட்டி எழுப்பப்பட முடியும் என்பது தியாகி திலீபன் வாழ்ந்து, தன்னை வருத்தி, வதைத்து, வழிகாட்டிச் சென்ற நெறி.

அந்தப் பாதையில் தமிழினத்தை அதன் விடிவை நோக்கி வழிநடத்தப் போகின்றார்கள் எனக் கூறும் நமது தலைவர்கள் அத்தகைய சுய தியாகம் எதற்கேனும் தயாரா?

தன் இனத்துக்காக - தன் மக்களுக்காக - தனது மக்களின் விடுதலைக்காக - கிஞ்சித்தேனும் தியாகம்செய்ய அவர்கள்தயார்இல்லை என்பதுதான் துரதிஷ்டவசமான உண்மை.

தியாகங்களுக்குத் தாயாரில்லாதவர்கள் உண்மைத் தலைவர்களாகி விடமாட்டார்கள்...!

# புகையிலை பொருள்களை பாடசாலைகள் அருகே விற்பதற்கு சென்னை உயர் நீதிமன்றத்தால் தடை



பாடசாலை வளாகங்கள் அருகே புகையிலை பொருள்கள் விற்பனை செய்வதை தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவிட்டுள்ளது.

மாணவர்கள், இளைஞர்களின் எதிர்காலத்தைச் சீரழிக்கும் குட்கா மற்றும் கூல் லிப் போன்ற பொருள்களைத் தடை செய்யக் கோரி வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கில் முதல் கட்டமாகப் பாடசாலை வளாகங்கள் அருகே புகையிலை பொருள்கள் விற்பதை இந்தியா முழுவதும் தடை செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

போதைப் பொருள்கள் விற்பனையைத் தடை செய்ய இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், குட்கா பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு கடும் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புகையிலை பொருள்கள் விற்பனை தொடர்பான இந்திய மத்திய அரசின் சட்டத்தில், திருத்தங்கள் செய்வது தொடர்பாகப் பதில் மனுத் தாக்கல் செய்யவும் இந்திய மத்திய அரசுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு காங்கிரம் எம்.பி. அனுரவுக்கு கடிதம்





இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்க, தனது இறையாண்மையுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி இலங்கை சிறையில் வாடும் அனைத்து இந்திய மீனவர்களையும் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய காங்கிரஸ் எம்.பி., ஆர்.சுதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக்கு ஒரு புதிய திசையை வழங்குவதற்கான உங்களின் உறுதியான நோக்கத்திற்கு இத்தகைய சைகை நிறைய வலு சேர்க்கும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது குறித்து மயிலாடுதுறை தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் எம்.பி. ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு எழுதிய கடிதத்தில்,

மயிலாடுதுறை தொகுதியைச் சேர்ந்த 37 மீனவர்களை விடுவிப்பதன் மூலம் ஒரு நல்ல தொடக்கத்தை உருவாக்க முடியும், மேலும் 80 மீனவர்கள் மற்றும் 173 மீன்பிடி படகுகள் இலங்கையின் காவலில் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பாகிஸ்தான் போன்ற போர்க்குணமிக்க அண்டை நாடு உட்பட பல நாடுகளுடன் கடல் எல்லைகளை இந்தியா பகிர்ந்து கொள்கிறது. ஆனால், இலங்கையைப் போல அண்டை நாட்டு மீனவர்களைக் கைது செய்து, அபராதம் விதிப்பது, தாக்குவது, கொல்வது என்று எந்த நாடும் தவறிழைப்பதில்லை.

பிராந்தியத்தில் பொறுமை மற்றும் அமைதியை சோதிக்கும் வகையில் இலங்கை தரப்பிலிருந்து அடிக்கடி இவ்வாறான ஆத்திரமூட்டல் செயற்பாடுகள் வருகின்றன.

வங்காள விரிகுடா போன்ற பொதுவான கடல் பகுதியில் மீன்பிடிக்கும் மீனவர்களை குற்றவாளிகள் போல் நடத்த முடியாது.

எனவே, உங்கள் இறையாண்மை கொண்ட ஜனாதிபதி அதிகாரங்களைப் பயன்படுத்தி மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.






# லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதலில் 569 பேர் உயிரிழப்பு

லெபனான் முழுவதும் இஸ்ரேல் மேற்கொண்ட குண்டுத் தாக்குதல்களில் சுமார் 569 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என அந்நாட்டுச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், தாக்குதல் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் லெபனானின் தெற்குப் பகுதியை விட்டு வெளியேறியுள்ளனர் என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், லெபனானுக்கு எதிரான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எதிராக எகிப்து, ஈரான் மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்த நிலையானது லெபனானை முழுமையாகப் போரை நோக்கித் தள்ளுவதாகவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனிடையே, காசா மீதான இஸ்ரேலின் போர் நடவடிக்கை காரணமாக இதுவரையில் 41,495 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 96,000 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.









# கமலா ஹறிஸின் பிரசார நடவடிக்கை அலுவலகம் மீது துப்பாக்கிச் சூடு

அமெரிக்காவின் தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹறிஸின் பிரசார அலுவலகத்தின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அரிசோனா மாகாணம் டெம்பேவில் கமலா ஹறிஸின் பிரச்சார அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

இந்த அலுவலகம் மீது மர்ம நபர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார்.

இது குறித்து தகவல் அறிந்தத பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடந்த போது அலுவலகத்துக்குள் எவரும் இருக்கவில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# சர்வதேச விமான நிறுவனத்தை ஏலத்தில் விற்கும் பாகிஸ்தான்




பாகிஸ்தான் சர்வதேச விமான நிறுவனத்தை வரும் ஒக்டோபர் 1ஆம் திகதி ஏலம் விடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நஷ்டத்தை ஈடுகட்ட 51 வீதம் முதல் 100 வீத விமான நிறுவனங்களை விற்கப் பாகிஸ்தான் அரசு திட்டமிட்டுள்ளது.

இதனை, தேசிய சட்டமன்ற தனியார் மயமாக்கல் குழுவின் தலைவர் அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தால் வலியுறுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, நஷ்டத்தில் இயங்கும் விமான நிறுவனத்தில் 51 வீதம் முதல் 100 வீதம் வரை விற்கப்படும் என்று பாகிஸ்தான் அரசு முன்பு கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.





# விஜித ஹேரத்துக்கு ஜெய்சங்கர் வாழ்த்து

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ள விஜித ஹேரத்திற்கு வாழ்த்துக்களைத் தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பதி விட்டுள்ளார்.

இந்திய - இலங்கை நாகரீக உறவுகளை வலுப்படுத்தவும், இரு நாடுகளுக்கு இடையே பாரம்பரியமாக நெருங்கிய நட்புறவை வலுப்படுத்தவும் ஜெய்சங்கர் தனது உறுதிப் பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

# இலங்கை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளால் நிதிக்கொள்கை திசையில் நிலையற்ற தன்மை

## பிட்ச் ரேட்டிங் அறிவிப்பு




நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள், இலங்கையின் நிதிக்கொள்கை திசையில் நிலையற்ற தன்மையை ஏற்படுத்தி இருப்பதாக சர்வதேச தரப்படுத்தல் நிறுவகமான பிட்ச் ரேட்டிங் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக வெளிநாட்டு நாணய கடன் மறுசீர மைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்ட இணக்கப்பாடு என்பவற்றில் தாமதம் ஏற்படலாம் என்றும் பிட்ச் ரேட்டிங் தெரிவித்துள்ளது.

புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பான தெளிவை, நவம்பர் மாதம் முன்வைக்கப்படவுள்ள 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

அண்மையில் சீனா மற்றும் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களுடனான இணக்கப்பாடு, இலங்கையின் முன்னேற்றத்தைக் காண்பிக்கிறது என்றும் பிட்ச் ரேட்டிங் தெரிவித்துள்ளது.

# அங்கீகரிக்கப்பட்ட 84 அரசியல் கட்சிகள் பொதுத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம்

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

அங்கீகரிக்கப்பட்ட 84 அரசியல் கட்சிகள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட முடியும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத் நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதவிர, சுயேச்சை குழுக்கள் சார்பிலும் வேட்பாளர்கள் இந்தத் தேர்த லில் போட்டியிட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.


அதேநேரம், ஒரு கட்சியின் சார்பில் மாவட்ட ரீதியில் போட்டியிடக்கூடிய வேட்பாளர்கள் எண்ணிக்கை தொடர்பில், எதிர்வரும் நாள்களில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விகிதாசார முறைமையூடாக பொதுத் தேர்தல் நடத்தப்படும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட் டுள்ளார்.









# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் கலந்துரையாடல் நேற்று யாழ் நகரில்

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கலந்துரையாடல் ஒன்று நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரன், ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப்பேச்சாளர் க.துளசி உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.
















# தியாகி திலிபனுக்கு தீவகத்தில் அஞ்சலி

தியாக தீபம் திலீபனின் 37ஆவது நினைவேந்தல் ஊர்திப் பவனி நிகழ்வு நேற்று மாலை யாழ் தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் யாழ் தீவக பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது

யாழ் வேலணை நினைவுத் தூபி முன்றிலில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி ஊர்திப் பவனி தீவகத்தின் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது இதன் பொது திலீபனின் திருவுருவப்படத்திற்கு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.












# நீதியை நிலைநாட்ட புதிய நியதியை உருவாக்குங்கள் அநுரவிடம் வாழ்வுரிமை இயக்கத் தலைவர் கோரிக்கை

நீதியை நிலைநாட்ட புதிய நியதியை உருவாக்குங்கள் என புதிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவைக் கோரியிருக்கின்றார் தமிழ்தேசிய வாழ்வுரிமை இயக்கத் தலைவர் வி.எஸ். சிவகரன்.

“நீதியை நிலைநாட்ட புதிய நியதியை உருவாக்குங்கள்!” – என்ற தலைப்பில் அவர் புதிய ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:–

இடதுசாரித்துவ சிந்தனையின் அடிப்படையில், பாட்டாளி வர்க்கத்தின் சமூக சம நீதிக்கோட்பாட்டின் அடிப்படையை நோக்கு நிலையாகக் கொண்டு உருவாகிய கட்சி, இடைக்காலத்தில் இனவாத சகதிக்குள் சிக்குண்டு, பௌத்த தேசிய அடிப்படைவாத மகா வம்ச கருத்தியலை நடைமுறையாக்க முனைந்ததே இனத்துவ சமூகக் கட்டமைப்புக்குள் விரிசலை ஏற்படுத்தியது.

மதவாதம், இனவாதம் ஆகியன தேசியவாதத்திற்கு எதிரானவை. தேசியவாதம் என்பது தேசிய இனங்களின் சுய நிர்ணய சமத்துவ இருப்பியலை கேள்விக்கு உட்படுத்தாது. சமநீதிக்குட்பட்டதே இடதுசாரி கோட்பாடு. இதை நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதே நீதி மறுக்கப்பட்டவர்களின் அறநிலை எதிர்பார்ப்பு ஆகும்.

துப்பாக்கி முனையில் இருந்தே அரசியல் அதிகாரம் பிறக்கிறது எனும் மாக்சிச கோட்பாட்டிற்கு ஆகப் பிந்திய உதாரணம் தாங்கள் ஏழு தசாப்தம் கடந்த இன முரண்பாட்டிற்கு தங்கள் காலத்தில் என்றாலும் தீர்வு காணப்படுவது அவசியம். அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட உரிமை மறுக்கப்பட்ட இனத்தின் ஏதிலி நிலையின் வலி என்ன என்பதை தாங்களும் உணர்ந்தவர் என்பதால் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகின்றோம்.

இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இந்த நாட்டில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. பகைமையை பகைமையால் தணிக்க முடியாது. பகைமையை அன்பினாலேயே தணிக்க முடியும் எனும் புத்தரின் போதனையை நிலை நிறுத்துங்கள். எவருக்கும் தீங்கற்ற பஞ்சசீல தம்மபதக் கொள்கை வழியை நடைமுறைப்படுத்தினாலேயே இந்த நாட்டில் சமத்துவம் ஏற்படும். நீர்த்துப்போன சனநாயகத்தில் வெற்று வாதங்களால் தான் முரண் நகை நீள்கிறது. அது கசப்புணர்வாக மாறி இனங்களுக்கு இடையே பசப்புக் கொள்கிறது.

தமிழர்கள் நல்லிணக்கத்தையே விரும்புகிறோம். அடிப்படை வாழ்வுரிமை இருப்பில் பங்கம் நேருவதால்தான் மனக்கிலேசம் ஏற்படுகிறது. சிங்கள மக்களை நாங்கள் எதிர்க்கவில்லை. அவர்கள் எமக்கு எதிரிகளும் அல்லர். சிங்கள அரசியல்வாதிகளின் தவறான – மேட்டிமை வாத – அடிமைத்துவ – சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்படுத்தும் – இனத்துவ அடக்கு முறையையே நாம் எதிர்க்கிறோம்.

எமது நீதிபூர்வமான கோரிக்கையை இதுவரை எந்த ஆட்சியாளரும் புரிந்து கொண்டவர்களாக வரலாறு இல்லை என்பதே வேதனைக்குரிய கசப்பான உண்மை. ஆகவே பாதிக்கப்பட்ட தரப்புடன் இதயசுத்தியாக மனம் திறந்து பூச்சிய நிலையில் இருந்து பேசுங்கள். நீதி என்பது பாதிக்கப்பட்டவனின் பக்கம் நிற்பதே. முதலாளித்துவ அதிகார வர்க்கத்துக்கு எதிரான பொதுவுடமை சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட தாங்கள், அடிப்படைவாத இனவாதத்தை முழுமையாக துறந்து விட வேண்டும். கடந்த காலத்தில் தங்களின் இனவாத, இனக்குரோத வன்முறை வாத செயற்பாடுகளால் தமிழ் மக்கள் தங்கள் மீது அச்சத்திலும் வெறுப்பிலும் உள்ளனர். அதனால் தான் தமிழர் தாயகம் எங்கும் தங்களுக்கான ஆதரவு கிட்டவில்லை. இதுதான் ராஜபக்ஷ குடும்பத்திற்கும் நேர்ந்தது.

எனவே கடந்த கால கசப்புணர்வுகளுக்காக தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோருங்கள். உலகத்தில் ஜனநாயகம் பெரு வளர்ச்சி அடைந்து விட்டது. ஜப்பான் ஹிரோசிமா நகர தாக்குதலுக்காக அமெரிக்கா வருந்துகிறது. ஜனாதிபதியே மரியாதை செலுத்தும் அளவுக்கு தவறை உணர்ந்து விட்டனர். 1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்திற்காகவும், கொரோனா காலத்தில் முஸ்லிம்களின் உடலை எரித்தமைக்காகவும் அண்மையில் நீதி அமைச்சர் மன்னிப்பு கோரி இருந்தார். தங்கள் கட்சியை கூட சிங்கள மக்கள் மன்னித்தமையால் தான் நீங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வர முடிந்திருக்கிறது. உங்கள் கடந்த காலத்தையும் நீங்கள் மீள் பார்வை செய்வது இன நல்லிணக்கத்திற்கு அவசியமாகும். அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த எந்த எல்லைக்கும் போகலாம். அதுதான் ஜனநாயகத்தின் உயர்ந்த நிலை. எனவே வாக்களிக்காதவருக்கும் வாய்ப்பளித்து வெற்றி கொள்வதே ஜனநாயக மரபியல் தத்துவமாகும். அதை நடைமுறைப்படுத்துவீர்கள் என நம்புகின்றோம். எதிர்பார்க்கின்றோம்.

நவீன இலங்கையை உருவாக்க முற்போக்கு சிந்தனையுடன் நகருங்கள். முறைமை மாற்றத்தை ஏற்படுத்துங்கள். புதிய அரசமைப்பை உருவாக்கங்கள். விவசாய, கடற்தொழில் புரட்சியை ஏற்படுத்துங்கள். கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்துங்கள். தற்போதைய அரசு இயந்திரம் முழுமையான ஊழலுக்குள் சிக்கித் தவிக்கிறது. தயவு தாட்சண்யம் இன்றி ஊழல்வாதிகளுக்கு நடவடிக்கை எடுங்கள். போதைப் பொருளை முற்றாக ஒழியுங்கள் வினைத் திறனற்ற பல இலட்சம் அரச ஊழியர்களை அகற்றுங்கள். காவல்துறையை முழுமையாக மறுசீரமையுங்கள்.

உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுங்கள். வருமானத்தை மீறி சொத்து சேர்த்தவர்களுக்கு நடவடிக்கை எடுங்கள். சொத்துக்களை அரசுடமையாக்குங்கள். அரசின் அர்த்தமற்ற செலவினங்களை குறையுங்கள். வருமான வரி திணைக்களத்தை வினைத்திறனுடன் இயங்க நடவடிக்கை எடுங்கள். ஊழலைக் கட்டுப்படுத்த வலிமையான சட்டமும் கடுமையான தண்டனையும் அவசியம். தற்போது நாட்டில் உள்ள ஊழல்வாதிகளை கைது செய்தால் புதிதாக சிறைச்சாலைகளை அமைக்க வேண்டி வரலாம். அவ்வளவு ஊழல்வாதிகள் உள்ளனர். ஊழல் இல்லாத திணைக்களம் இந்த நாட்டில் இல்லை. கடந்த காலத்தில் அரசியல் சூதாட்டத்திலும் ஊழலிலும் ஈடுபட்ட எந்த அரசியல்வாதியையும் உங்கள் அரசில் சேர்த்துக் கொள்ளாதீர்கள். எமது சித்தாந்தம் கடந்து, இவ்விதமான சீர்திருத்த முறைமை மாற்றத்திற்காக உங்கள் தெரிவை வரவேற்கிறோம்.வாழ்த்துகிறோம்.

மனித சிந்தனை தோற்றுவித்திருக்கும் யாவற்றையும் மறு பரிசீலனை செய், விமர்சனத்துக்கு உட்படுத்து, மாற்றி அமை, செயல்படு எனும் மாக்ஸ்சிச சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்துங்கள். மதச்சார்பற்ற தேசத்தை உருவாக்கி, சமூக நீதியை நிலைநாட்டுங்கள். வடகிழக்கிலுள்ள அத்தியாவசிய நிரந்தரப் பிரச்சினையில் பௌத்த தேசியவாதம் கடந்து, அவர்களும் மனிதர்கள், அவர்களுக்கும் உணர்திறனும் வாழ்வியல் உரிமையும் உண்டு என்பதை உணர்ந்து, உளத்தூய்மையுடன் செயலாற்றுங்கள். வரலாறு உங்களைப் பதிவு செய்யும். இல்லையேல் காலம் உங்களை காலாவதியாக்கிவிடும் என்பதும் தங்களுக்கு புரியாமல் இல்லை. நன்றி. – என்று உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -26.09.2024

## மேஷம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.

இன்று சிறந்த ஆற்றலுடன் காணபடுவீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.

## ரிஷபம்

இன்று நீங்கள் நம்பிக்கையான மன நிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்க முயலுங்கள்.

## மிதுனம்

இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

கால் வலி மற்றும் பல் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை உதவிகரமாக இருக்கும்.

## கடகம்

இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## சிம்மம்

இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே சிறிது கவனமுடன் இருக்கவும்.

## கன்னி

இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## துலாம்

உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆற்றலும் ஆரோக்கியமும் குறைந்து காணப்படும். தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## விருச்சிகம்

சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம்சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -26.09.2024

## தனுசு

இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள். உங்கள் பணத்தை நீங்கள் சிறப்பாக கையாள வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியமே காணப்படும். கால் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

## கும்பம்

இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

## மகரம்

இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.

இன்று பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## மீனம்

உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்கள் நம்பிக்கை மற்றும் மன திடம் காரணமாக ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

